# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2013 நவம்பர் திங்கள் 26.11.2013–ம் நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.34, 35, 36, 37, 38, கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.15, 17, 18, 19, 24, 26, 31, 32 மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண். 1, 2, 3, 8, 9, 10, 11, 13, 14, 15, 16 ஆகிய கடைகளுக்கும் 31.10.2013 வுடன் உரிமம் முடிவடைவதால் 01.11.2013 முதல் 31.10.2016 முடிய மூன்றாண்டுகளுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும், வாடகை தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வரிவிதிப்பு எண். | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகைத் தொகை ரூ. | 15% உயர்வு செய்ததொகை ரூ. | உயர்வு செய்யப்பட்ட பின்னர் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| **காமராஜர் பேருந்து நிலைய கடைகள்** | | | | | |
| 1 | 2007006 | C.S.ராஜ் | 1173 | 176 | 1349 |
| 2 | 2007007 | C.S.ராஜ் | 1179 | 177 | 1356 |
| 3 | 2007008 | C.S.ராஜ் | 1167 | 175 | 1342 |
| 4 | 2007009 | C.S.ராஜ் | 1173 | 176 | 1349 |
| 5 | 2007010 | C.S.ராஜ் | 1167 | 175 | 1342 |
| **கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகள்** | | | | | |
| 1 | 2007022 | எம். அப்துல்ஹறீம் | 1736 | 260 | 1996 |
| 2 | 2007023 | எ. செய்யது அலி | 1731 | 260 | 1991 |
| 3 | 2007024 | T.ஜெஸ்டின் செல்வகுமார் | 1812 | 272 | 2084 |
| 4 | 2007025 | T.ஜெஸ்டின் செல்வகுமார் | 1794 | 269 | 2063 |
| 5 | 2007026 | எம். அப்துல்ஹறீம் | 1736 | 260 | 1996 |
| 6 | 2007029 | பால்தாஸ் | 1520 | 228 | 1748 |
| 7 | 2007036 | அமலதாஸ் | 2760 | 414 | 3174 |
| 8 | 2007062 | ஐசக் | 1736 | 260 | 1996 |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள்** | | | | | |
| 1 | 2007037 | எ. பொன்னுமணி | 1392 | 209 | 1601 |
| 2 | 2007038 | எ. பொன்னுமணி | 1403 | 210 | 1613 |
| 3 | 2007039 | எம். வேலப்பன் | 1409 | 211 | 1620 |
| 4 | 2007044 | எம். பீர்முகம்மது | 1415 | 212 | 1627 |
| 5 | 2007045 | நைனாமுகம்மது | 1420 | 213 | 1433 |
| 6 | 2007046 | வி. சேகர் | 1403 | 210 | 1613 |
| 7 | 2007047 | வி. சேகர் | 1409 | 211 | 1620 |
| 8 | 2007049 | எம். ஐனேசியாள் | 1415 | 212 | 1627 |
| 9 | 2007050 | ஜி. செந்தில் குமார் | 1426 | 214 | 1640 |
| 10 | 2007051 | எஸ். முருகேசன் | 1438 | 216 | 1654 |
| 11 | 2007052 | பி. ஜான்நிக்ஷன் | 1438 | 216 | 1654 |

**<u>அ.குறிப்பு :</u>** மேற்படி வாடகைத்தரர்களின் வாடகை உரிம காலம் 31.10.2013—வுடன் முடிவடைந்துள்ளதால் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்து உரிமம் வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2011)

**தீர்மானம் எண்.765 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக, ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட குளச்சல் கிராம புல எண்.204/10—ல் மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளையும் நிறுத்துவது தொடர்பாக திரு.சி.செல்வராஜ், கோடிமுனை என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்துள்ள வழக்கு எண். W.P.(MD)No.17283/13-க்கான வழக்கு கட்டணம் ரூ.7,500/—ஐ வழங்க கேட்டு திரு.எம்.முருகன், அரசு வழக்கறிஞரிடமிருந்து கடிதம் வரப்பெற்றதால், அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகையினை வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3587/13)

**தீர்மானம் எண்.766 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 20 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார் மூலம் 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு பிளீச்சிங் பவுடர் கலக்கப்பட்டு தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2013—14 —ம் ஆண்டிற்கு பிளீச்சிங் பவுடர் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 50,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1110/08)

**தீர்மானம் எண்.767 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, 3 மற்றும் 4 வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி இந்நகர்மன்ற தீர்மானம் எண்.353 நாள் 31.08.2012—ல் ரூ.6,35,220/—க்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 30.10.2013 தேதியுடன் முடிவடைந்துள்ளது. அத்தியாவசிய பணியான பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி ஏற்கெனவே பெறப்பட்ட ஒப்பந்த விலை விகிதத்தில் அதே ஒப்பந்தக்காரர் மூலம் மேற்படி பணியினை 01.11.2013 முதல் 31.12.2013—ம் தேதிவரை கால நீட்டிப்பு செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.1,10,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :**

1) பொது சுகாதாரப் பணியின் அவசரம் அவசியம் கருதி பணிநீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2622/09)

**தீர்மானம் எண்.768 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2013 நவம்பர் திங்கள் 26.11.2013–ம் நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி சம்பு அருகில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு எண்.13, கே.எஸ்.எஸ்.காலனி ஆழ்துளை கிணறு எண்.22 மற்றும் சீம்பிளிவிளை ஆழ்துளை கிணறு எண்.14 ஆகியவற்றின் மின்மோட்டார்கள் பழுதடைந்ததால் மேற்படி ஆழ்துளை கிணறுகளிலிருந்து துறைமுகத்தெரு, கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மற்றும் அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்ற இயலாமல் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு தடையின்றி குடிநீர் வினியோகம் செய்வதற்கு ஏதுவாக மூன்று மின் மோட்டார்களை சரி செய்யவும், ஏற்கெனவே இருப்பில் வைக்கப்பட்டுள்ள பழுதடைந்த இரண்டு மின் மோட்டார்களை சரி செய்யவும் ரூ. 67,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதிகள் பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/3105/13)

**தீர்மானம் எண்.769 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் பகுதியில் உள்ள 3” பகிர்மான குழாய், காமராஜர் சாலையில் உள்ள 3” Sluice valve, துறைமுகத்தெரு Gate valve, பள்ளிரோட்டில் பாலையா மார்பிள் கடை முன்னால் அமைந்துள்ள 3” Sluice valve, துறைமுகத்தெரு 4” Sluice valve, பவுண்டரிரோடு திருப்பில் 5” Sluice valve மற்றும் தும்பக்காட்டில் அமைந்துள்ள 3” Sluice valve ஆகியவை பழுதடைந்துள்ளதால், சில பகுதிகளில் குடிநீர் அழுத்தம் அதிகமாகவும், சில பகுதிகளில் குறைவாகவும் உள்ளது. எனவே சீரான குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கு ரூ. 51,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதிகள் பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/3187/12)

**தீர்மானம் எண்.770 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி சந்திப்பு முதல் களிமார் பாலம் வரை IUDM 2012–13 திட்டத்தின்கீழ் சாலையின் இரண்டு பக்கமும் வடிகால் ஓடை அமைக்கும் பணிக்காக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் சாலையின் இரு பக்கமும் தோண்டும் போது சாலையின் தெற்கு பகுதியில் 90mm PVC Supply line–ல் உடைவு ஏற்பட்டு அப்பகுதியின் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி பழுதினை சரி செய்வதற்கு ரூ. 34,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி சட்ட விதிகள் பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ2/3262/13)

**தீர்மானம் எண்.771 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு 1–ல் மீனவர் ஓய்வறை கட்டும் பணியினை மேற்கொள்வதற்காக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2013–14–ன் கீழ் ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண். ஆ3/3469/13 நாள் 14.10.2013–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மற்றும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ள விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2632/13)

**தீர்மானம் எண்.772 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் பகுதியில் அமைந்துள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடி சுவர்கள் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை சுத்தம் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே மேற்படி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் புதிதாக படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடி சுவர்கள் அமைக்கவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3852/13)

**தீர்மானம் எண்.773 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2013–14 திட்டத்தின்கீழ் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்ட குடிநிர் அபிவிருத்தி பணிகளுக்கு திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.34.00 இலட்சம் போக மீதித் தொகை ரூ.4.00 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண். 746, நாள் 30.10.2013–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 22.11.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் Technical Bid திறக்கப்பட்டு,

தொழில் நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 25.11.2013 அன்று Price bid திறக்கப்பட்டு, தயார் செய்யப்பட்டுள்ள ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர்,<br>கறுக்கன்குழி,<br>திக்கணங்கோடு அஞ்சல். | 0.06% மதிப்பீட்டை விட குறைவு.<br>(ரூ.37,25,147.60) |
| 2. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர்,<br>அணஞ்சிக்கோடு,<br>கருங்கல். | 0.052% மதிப்பீட்டை விட அதிகம்.<br>(ரூ.37,46,650/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, LOA (Letter of Acceptance) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/115/13)

**தீர்மானம் எண்.774 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் உள்ள க.எண்.14/31, 12/68B ஆகிய இரண்டு வீட்டில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் சுனாமியின்போது பழுதடைந்து மேற்கண்ட குடியிருப்புகளில் உள்ளவர்களின் குடிநீர் குழாய் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட வீட்டிலுள்ள குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்டதற்கான எந்த பதிவும் பதிவேட்டில் பதியவில்லை. எனவே மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பு துண்டித்ததற்கான பதிவை பதிவேட்டிலும், கணனியிலும் பதிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/3689/13)

**தீர்மானம் எண்.775 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**20வது வார்டு உறுப்பினர் திரு.எம்.ஏ.ரஹீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 4 கோயில்கள், ஜேம்ஸ் மருத்துவமனை, கிரித்தங்கம் மருத்துவமனை, அஞ்சல் அலுவலகம், நர்சிங் கல்லூரி விடுதி, குழந்தைகள் செல்லும் பள்ளிக்கூட பாதை, பள்ளிக்கூடங்கள், மூன்று திருமண மண்டபங்கள், டியூசன் சென்டர், ரேசன் கடை ஆகியவற்றின் மத்தியில் திடீரென ஒரு மதுக்கடையை (கடைஎண்.4711) இரவோடு இரவாக திறக்கப்பட்டுள்ளது. குளச்சல் பகுதியில் ஏற்கெனவே நான்கு மதுக்கடைகள் உள்ளது. தற்போது திறக்கப்பட்டுள்ள மதுக்கடையின் அருகிலும் மதுக்கடை அமைந்துள்ளது. மேற்படி கடையானது பொதுமக்கள், பெண்கள் குழந்தைகளோடு அதிகம் வந்து செல்லுமிடமாக இருப்பதால், இந்நகர மக்களின் நலநன கருத்தில் கொண்டு மேற்படி கடையை (கடை எண்.4711) இப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கும், மேலும் இந்நகராட்சி பகுதியில் வேறு புதிய கடைகளை திறப்பதற்கு அனுமதி வழங்காமல் இருப்பதற்கும் மாவட்ட நிர்வாகத்தை கேட்டு இம்மன்றம் தீர்மானிக்கலாம்.
**சிறப்பு தீர்மானமாக கொண்டுவரலாம் – தலைவர்.**

**தீர்மானம் எண்.776. 26.11.2013 அன்று மாதந்தோறும் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் இப்பொருள் தீர்மானம் நிறைவேற்றிட 20வது வார்டு உறுப்பினர் கொண்டுவந்த மனுவின் அடிப்படையில், கூட்டத்தில் கலந்து கொண்ட 18 உறுப்பினர்களில் 3வது வார்டு உறுப்பினர் N.M.தாசீம், 7வது வார்டு உறுப்பினர் C.பென்சிகர், 8வது வார்டு உறுப்பினர் S.குருசையா, 10வது வார்டு உறுப்பினர் S.ஜெஸ்டின்ராஜ், 22வது வார்டு உறுப்பினர் M.ஷாகுல்அமீது ஆகிய உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்றிட எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்ய, 13 உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி